# சர்வதேச நீதிமன்றத்தில் மனித உரிமைகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசனைக் கருத்தினைத் தேடுதல்.

உலகின் மிகப்பெரிய பிரச்சனையை உலகின் மிக உயர்ந்த நீதிமன்றத்திற்கு கொண்டு வருதல்: World's Youth for Climate Justice ("WYCJ") ஆனது மனித உரிமைகள் மற்றும் காலநிலை நெருக்கடி தொடர்பான சர்வதேச சட்டத்தின் முற்போக்கான வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்குவது தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக் கருத்தினை நாடுகிறது. அத்தோடு WYCJ ஆனது காலநிலை நீதிக்கான தடைகளை உடைத்தெறியவும் இன்றைய மற்றும் எதிர்கால தலைமுறையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களின் ஆதரவை நாடுகிறது.

## மனித உரிமைகள் மற்றும் காலநிலை நெருக்கடி

தற்போது மனித உரிமைகள் மற்றும் காலநிலை நெருக்கடிக்கும் இடையிலான தொடர்பு நன்கு நிறுவப்பட்டுள்ளது. காலநிலை தாக்கங்களானது முன்னர் இருந்து வந்த ஏற்றத்தாழ்வுகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சவால்களை அதிகரிக்க செய்துள்ளது. உதாரணமாக வறுமை, நல்வாழ்வு, செல்வ சமத்துவமின்மை, பாலின உறவுகள்[1] மற்றும் கீழ்நிலை மக்களின் வாழ்வு ஆகியன மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது.[2] மேலும் மக்கள் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் தமது வாழ்விலே அனுபவிக்க வேண்டிய மனித உரிமைகள், நீர், சுகாதாரம், உணவு, கல்வி மற்றும் சுயநிர்ணய உரிமை முதலானவையும் மிகவும் பாரதூரமாக காலநிலை மாற்றம் மற்றும் அதனை தழுவிய நடவடிக்கைகளின் காரணமாக பாதிப்படைந்துள்ளது. UNDP ன் நிர்வாக இயக்குனர் ஆச்சிம் ஸ்டெய்னர் குறிப்பிடுகையில், "ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தேசிய அரசாங்கங்களும் காலநிலை மாற்றம் மற்றும் அதனது வெளிப்பாடுகள் மனித உரிமைகளில் தாக்கத்தினை செலுத்தும் என குறிப்பிட்டிருந்தன"[3] என்றார். மேலும் இந்த சிக்கலினைத் தீர்ப்பது தொடர்பான கடமையில் அரசாங்கங்களினதும் தனியார் நிறுவனங்களினதும் உடன்பாடு குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது.[4]

காலநிலை நீதி குறித்த நீதிமன்றத்தின் அதிகாரப்பூர்வ வழிக்காட்டுதலுக்கான இந்த கோரிக்கை காலநிலை பேரழிவால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றான பெசிபிக் தீவிலுள்ள மாணவர்களால் தொடங்கப்பட்டது. அத்தோடு தார்மீக தெளிவுடன் கூடிய இத் தலைமை 139 சி.எஸ்.ஓக்கள் மற்றும் பெசிபிக் அரசின் ஆதரவைப் பெற்றுள்ளது. மேலும் உலகெங்கிலும் உள்ள இளைஞர்கள் தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினர்க்கான காலநிலை நீதியை பெறவும், இவ்விடயதானத்தில் உட்புகுவதற்கும், ஒத்துழைப்பை வழங்குவதற்கும் ஊக்கமளிக்கிறது.

## ஆலோசனைக் கருத்து

ஆலோசனைக் கருத்தை வழங்குவதன் மூலம் நீதிமன்றமானது அதிக உத்வேகத்தினை பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் அளிக்க முடியும், தணிப்பு மற்றும் சர்வதேச உதவி தொடர்பான அரசுகளின் நடவடிக்கைகளுக்கு அதிகாரப்பூர்வமான அடிப்படையினை வழங்கலாம், தற்போது சர்வதேச சட்டத்தில் தனித்தனியாக இருக்கும் பகுதிகளை ஒருங்கிணைத்தலாம். அதாவது மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் சட்டம், உள்நாட்டு, பிராந்திய மற்றும் சர்வதேச தீர்ப்புகள் மற்றும் காலநிலை

[1] OHCHR, Report of the Office of the United Nations High Commissioner for Human Rights on the Relationship Between Climate Change and Human Rights,U.N. Doc. A/HRC/ 10/61, January 15, 2009.
[2] Inter-American Court of Human Rights, Advisory Opinion OC-23 /17, of November 15, 2017.
[3] For example in the Male Declaration (2007), Cancun Agreement (2010) .

[4] UNEP and Sabin Center for Climate Change Law (Colombia Law School), 'Climate Change And Human Rights' (United Nations Environment Programme2015) <https://web.law.columbia.edu/sites/default/files/microsites/climate-change/climate_change_and _human_rights.pdf> accessed 24 November 2020, 8.

மாற்றத்திற்கான விஞ்ஞான சான்றுகள் குறித்த சிமெண்ட் இன் ஒருமித்த கருத்து தொடர்பில் உந்துதல் மற்றும் வழிகாட்டுதலை வழங்கலாம்.

மேலும் வரலாற்று சிறப்புமிக்க $CO_2$ ன் மாசு வெளிப்பாடு தொடர்பில் இளைஞர்களின் பங்களிப்பு குறைவாக உள்ளது. ஆனால் பாதகமான காலநிலை பாதிப்புகளோ அதிகரித்த வண்ணம் உள்ளது. இது ஆச்சரியமான ஒன்றல்ல. எனவே தான் உலகெங்கிலும் உள்ள இளைஞர்கள் காலநிலை நீதியை தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினர்க்காக நாட வேண்டிய நிலை உருவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆலோசனைக் கருத்தை கோருதல்**

சர்வதேச நீதிமன்றங்களின் நியாய தீர்ப்பு பொதுவாக தீர்ப்புக்களை கட்டாயமாக அமுல்படுத்துவதில் அல்ல. மாறாக ஒரு மதிப்பிற்குரிய நீதித்துறையாக கருதப்படும் அங்கங்களால் வெளிக்கொணரப்பட்ட தார்மீக மற்றும் சட்ட அதிகாரத்தில் உள்ளது. ICJ என்பது ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மையான அங்கமாகும்.[5] ஐ.நா.ச மற்றும் ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் ICJ விடம் ஆலோசனை கோர தகுதியுடையவை.[6] மேலும் ஐ.நா. பொதுச்சபை (UNGA) மற்றும் பாதுகாப்பு சபை ஆகியவை எந்தவொரு சட்டக் கேள்விக்கும் ஆலோசனைக் கோரலாம். எனவே நாம் UNGA மூலமாக ஆலோசனைக் கருத்தை கோருவதை நோக்கமாக கொண்டுள்ளோம். இவ் ஆலோசனைக் கருத்தினை கோருதலானது உலகெங்கிலும் உள்ள இளைஞர்களுக்கும், மக்களுக்கும் மகிழ்வினைத் தரும் ஒன்றாக இருக்குமென நம்புகின்றோம். இதன் தொடக்கமாக ICJAO உடனான தொடர்பாடல் மாறும். மேலும் மனித உரிமைகளை மையமாகக் கொண்ட காலநிலை நடவடிக்கைக்கான தீப்பொறி போன்ற துகள்கள் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் தற்போதுள்ள கடமைகள் குறித்த அதிகாரப்பூர்வ பகுப்பாய்வு இதுவரையிலான சர்வதேச சட்டத்தின் ஆதாரங்களில் சிதறிக் கிடக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.

**நாங்கள், இவ் உலகின் இளைஞர்கள்**

ICJ ன் ஆலோசனை கருத்துக்காக உலகளாவிய ரீதியில் அரசு மற்றும் அரசு சாரா ஆதரவைப் பெறுவதற்காக நாங்கள் பணியாற்றி வருகின்றோம். மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையினை வெளியிட்ட டேவிட் பாய்ட் இன் ஆதரவையும் நாங்கள் பெற்றுள்ளோம். மேலும் உலகெங்கிலும் உள்ள இளைஞர் குழுக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர் ஒரு ஆலோசனைக் கருத்தின் நேர்மறையான தாக்கங்களை கவனத்திற் கொண்டு வருவதற்காக ஒன்றுபடுகின்றன. அத்தோடு கதைகள் வாயிலாகவும், அரசாங்கங்களுடன் தொடர்பினை மேற்கொள்வதன் மூலமும், சர்வதேச சட்டத்தின் பங்களிப்பு மற்றும் காலநிலை நெருக்கடி மற்றும் மனித உரிமைகளுக்கிடையேயான உள்ளார்ந்த தொடர்பு பற்றி சமமான கல்வியினை கற்பிப்பதன் மூலமும் நாங்கள் இந்த வார்த்தையினை பரப்புகின்றோம்.

**தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினரின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக சர்வதேச நீதிமன்றத்திற்கான பயணத்தில் இவ் உலகின் இளைஞர்களான நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றோம். நீங்கள் எங்களுக்கு உறுதுணையாக நிற்பீர்கள் என நம்புகின்றோம்.**

[5] Article 93 para. 1 Charter of the United Nations

[6] Article 96 Charter of the United Nations and article 65(1) of the Statute of the International Court of Justice.